**அ.வ. எண்**: 85/2021 **நாள்**: 06.11.2025

நீலகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 2025 ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 06 ம் நாள் **வாதி தரப்பு சாட்சி சந்திர ராஜன் PW-2** என்பவரின் சாட்சியம் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.ராமலட்சுமி, உதவியாளர் நிலை 3 என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **சந்திர ராஜன்** | தொழில் | : |
| தந்தை பெயர் | : நஞ்சன் | சமயம் | : |
| கிராமம் | : | வயது | : 66 |
| தாலூக்கா | : | சாதி | : |

---

**முதல் விசாரணை :**

1. நான் இந்த வழக்கில் **வாதி தரப்பு சாட்சி** ஆவேன். இன்று, நான் முதல் விசாரணை சாட்சியத்தினை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளைப் படித்து கேட்டு தெரிந்து கொண்டேன். அவைகள் யாவும் சரியானவை என்று நான் உறுதி கூறுகிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

**2 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

2. நான் நஞ்சநாட்டில் குடியிருந்து வருகிறேன். நான் தாவா சொத்தின் அருகே குடியிருக்கிறேனா என்றால் ஆமாம், தாவா சொத்திலிருந்து சுமார் 100 மீட்டர் தொலைவில் குடியிருக்கிறேன். வாதி எனது உறவினர் என்றால் சரிதான். தாவா சொத்து செவணியம்மாள் என்பவருக்கு சேர்ந்தது என்றால் சரிதான். செவணியம்மாளை சிவலிங்கம் என்பவர்தான் பார்த்து கொள்கிறார் என்றால் சரிதான், வாதியும் கோயம்புத்துாரில் இருந்து வந்து பார்த்துக்கொள்கிறார். செவணியம்மாளை இறுதிவரை சிவலிங்கம் என்பவர்தான் பார்த்து கொண்டார் என்றும் வாதி கோவையில் இருந்து வந்து

பார்த்துக்கொள்ளவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தான வீடு பழைய வீடு என்றால் சரிதான். மேற்படி தாவா சொத்து வீட்டில் கழிவறை வசதி இல்லாமல் இருந்ததால் சிவலிங்கம்தான் அதை சரி செய்து கட்டியுள்ளார் என்றால் சரிதான்.

3. சிவலிங்கம் செவணியம்மாளை பார்த்துக்கொண்டதால் மேற்படி தாவா சொத்தினை செவணியம்மாள் சிவலிங்கம் பெயருக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, ஆனால் தாவா சொத்தினை பொறுத்து 1998 ஆம் ஆண்டே பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது. 1998 ஆம் ஆண்டு ஏற்பட்ட பாகப்பிரிவினையில் தாவா சொத்து யாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் ஜோகி கவுடருக்கு ஒதுக்கப்பட்டது. செவணியம்மாள் உயிருடன் இருக்கும்போதே தாவா சொத்தினை சிவலிங்கம் பெயருக்கு எழுதிக்கொடுத்துவிட்டார் என்பதால் ஜோகி கவுடருக்கு தாவா சொத்தில் உரிமையில்லை என்றால் சரியல்ல, 1998 ஆம் ஆண்டு பாகப்பிரிவினையில் தாவா சொத்தானது சுப்ரமணி, சந்திரன் மற்றும் சிவலிங்கம் ஆகிய மூவருக்கும் பிரித்து கொடுக்கப்பட்டது.

4. ஜோகி கவுடர் பாகப்பிரிவினையின் போது வீட்டை மட்டும் ஒதுக்கினாரா அல்லது அனைத்து சொத்துக்களையும் ஒதுக்கினாரா என்றால் அனைத்து சொத்துக்களையும் பாகப்பிரிவினை செய்து ஒதுக்கிவிட்டார். அவ்வாறு செய்யப்பட்ட பாகப்பிரிவினையில் தாவா சொத்து யாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சுப்ரமணி, சந்திரன் மற்றும் சிவலிங்கம் ஆகிய மூவருக்கும் பிரித்து கொடுக்கப்பட்டது. நான் கூறுவது உண்மையல்ல என்றும் செவணியம்மாள் உயிருடன் இருக்கும்போதே சிவலிங்கத்திற்கு தாவா சொத்தினை எழுதிக்கொடுத்துவிட்டார் என்றும் அதில் வாதி சந்திரனும் கையொப்பம் செய்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. எனது மனைவியும், வாதியின் மனைவியும் ஒன்றுவிட்ட சகோதரிகள் என்றால் சரிதான். வாதி எனது சகலை முறை என்பதால் வாதிக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றும், வாதி சந்திரன்தான் என்னை இன்று நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார் என்றும் சொன்னால் சரிதான்.

**(1 மற்றும் 3 பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாக்கப்பட்டதால் அவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை).**

**மறுவிசாரணை:** இல்லை

L. Prakash

Digitally signed by L. Prakash
Date: 2025.11.06 18:32:08 +0530